வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | தமிழ் - I | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி I

*1)*

அ) I. குறிப்பிட்ட இடத்திற்கென்று வரையறை செய்யாது எவ்விடத்தும் பெய்யும் இயல்பினை உடைய மழையானது வற்றிய குளத்திலும் பெய்தது அகன்ற விளை நிலத்திலும் பொழிந்தது இவ்வாறு குளத்திலும் விளை நிலத்திலும் பெய்யாது களர் நிலத்திலும் பெய்தது. அம்மழை போல மதம் மிக்க யானையையும் கழல் அணிந்த காலையும் உடைய பேகன் பிறர்க்கு கொடை அளிக்கும் போது பேதமை உடையவனாகின்றான் ஆனால் பிறர் படைவந்து போர் செய்யின் அப்படையிடத்து தான் பேதமைப்படான்.

II. திணை – பாடாண்திணை
துறை - இயன் மொழி

III. உவமையணிகையாளப்பட்டுள்ளது.
"வரையாமரபின் மாரிபோல"
இங்கு பேக மன்னன் கொடை மடம் சிறப்பித்துக் கூறப்படுகின்றது அதாவது வேண்டிய இடத்தும் வேண்டாது இடத்தும் பெய்யும் மழையைப் போல பேக மன்னனும் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்பதை அறியாது இரப்போர் எவராக இருந்தாலும் கொடை செய்வான்.
உவமானம் - மாரி
உவமேயம் - பேகன்
பொதுத்தன்மை – கொடை மடம்படுதல்.

(3x4=12 புள்ளிகள்)

ஆ) I. கங்கையின் தென்கரை சேர்க்குமாறு குகனைப் பரதன் வேண்ட குகனின் கட்டளைப் படிநாவாய்கள் வந்து சேர்ந்த சந்தர்ப்பம்.

II. குகன் :- தன் இனத்தவரை அடைந்து நீங்கள் தென்கரை சென்று படகுகளை கொண்டு வரும் படி தன் இனத்தவருக்குக் கட்டளை இடல்.

III. சிவபெருமான் வெள்ளி மலை போலவும் (திருக்கைலாய மலை) அழகிய பொன்மயமான மகாமேரு மலையைப் போலவும் குபேரனின் புட்பக வாகனம் போலவும் பல்வேறு வடிவங்களாக் காட்சியளித்தது.

(3x4=12 புள்ளிகள்)

*2)*

அ) I. மானிட சக்தியினாலே பலர் இந்த உலகத்தை ஆட்சி செய்துள்ளனர்.

- மானிட சக்திக்கு அப்பால் வேறு எந்த ஆற்றலற்ற இருந்ததில்லை
- மானிடம் என்பது இழிவான ஆற்றலில் ஒன்று அல்ல உயிரற்ற உணர்ச்சியற்ற தொன்றைக் குறிப்பதும் அல்ல அது உயர்வானது உணர்ச்சி மிக்கது ஆற்றல் உள்ளது
- மானிட சக்தி மூலம் இயற்கையையும் அடக்கியாண்டு பல சாதனைகளைப் புரிந்து விட்டான்.

II. மானிடத் தன்மையின் ஆற்றலை உணராமையின் இழிவினைக் குறிப்பிடுகின்றார்.

III.
- எளிமையான மொழிப் பிரயோகம்
- ஒருவரை முன்னிறுத்தி அவருடன் பேசும் பாங்கில் எடுத்துரைத்தல்
- தன்னுடைய கருத்தை வலியுறுத்த உலக வரலாறு மானிட வரலாறு முதலானவற்றை எடுத்துரைத்தல்
- பொருத்தமான வினாக்களை வினாவுவதன் மூலம் தனது கருத்தை வலியுறுத்தல்.

agaram.lk

IV. உருவக அணிப்பிரயோகம்
உ- ம் மானிடம் என்றொருவாள்
மானிடம் என்றொரு குன்று
சமத்துவ உச்சி பகுத்தறிவாம் விழி

ஆ) I. ஏமாற்றத்தின் விளைவாக டாக்ரருக்குக் கிட்டப் போய் அவள் என்னை ஏமாத்திப் போட்டாள், ஏமாத்துக்காரி விட்டிட்டு ஓடித் தொலைஞ்சு போனாள் எனக் கூறுதல் ஓடிப்போறத்துக்காகத்தான் என்னை டாக்ரரிடம் அனுப்பினாள் எனக் கூறுதல் ஏன் எடி உனக்கு இந்தப் பொய்? ஏனிந்த பசப்பும் பாசாங்கும்? ஏன் இந்த சூதும் சதியும் என வினவுதல்.

II. கண்ணீர் முட்டுகிறது ஆத்திரமும் துயரமும் போட்டி போடுகின்றன. நான் உனக்கு என்ன தீமை செய்திருப்பன் ஒரு துரோகம் நினைச்சிருப்பேனா? இந்த மாதிரி நீன் ஏன் செய்தாய்? என எண்ணுதல்

III. மன்னிக்க வேணும் மிஸ்ரர் மனோகரன் இதெல்லாம் என்ன? என்ர பிள்ளை செத்துப்போச்சு என்ர மனிசி வீட்டில துக்கமும் துன்பமுமாய் அழுதபடியே இருக்குது எனக்கு நிக்கவே முடியாதபடி களைப்பாயும் சோர்வாயும் இருக்குது மூண்டு நாளாய் இரவு பகல் நித்திரை இல்லை எனக் கூறுதல்

IV. அ. உம்மட கோமாளிக் கூத்துக்கு பக்க வாத்தியம் வாசிக்கச் சொல்லிக் கேக்கிறீர் என்பது மூலம் வைத்தியரின் துன்பத்தை விட மனோகரன் தனது துன்பமே பெரிதென எண்ணி தன்னை அதற்கு ஆதரவு தருமாறு எண்ணுகின்றான் என்பது வெளிப்படுகின்றது.

ஆ. உம்மட மேடைக்குப் பந்தல் காலாய் நிண்டு சுமக்கச் சொல்லிறீர் என்பதன் மூலம் ஆதரவு அளிப்பதை விடதன்னுடைய துன்பத்தில் பங்கு கொள்ளுமாறு மனோகரன் எண்ணுகின்றான் என வைத்தியர் எண்ணுவதுபுலப்படுகிறது ஒவ்வொருவருக்கும் தத்தமது துன்பம் தான் மேலானது.

## பகுதி II

*3)*

அ)

- முதலாம் குறள் தொடக்கம் நான்காம் குறள் வரையான குறள்களின் விளக்கம்
- ஒன்றுக்கொன்று மாறுபட்ட வலிமை உடையவர்க்கு அரணைச் சேர்ந்திருப்பதாகிய ஆக்கமானது பல பயன்களையும் கொடுக்கும்
- பகைவரைச் சூழ்ந்து முற்றுகை இடுவதற்கான இடத்தை அறிய முன்னர் அவரை வெல்வதற்கான எம்முயற்சியிலும் இறங்கக்கூடாது அவரைப் பலவீனமானவர் என்று இகழவும் கூடாது
- பகையை வெல்லக் கூடிய பொருத்தமான இடத்தை அறிந்து தம்மைப் பாதுகாத்துப் பகைவரை எதிர்த்துப் போர் செய்ய முனைந்தால் வலிமை இல்லாதவரும் வலிமை உடையவராய் வெற்றி காண்பார்.
- தமக்கு பாதுகாப்பான இடம் அறிந்து சென்ற அரசர் அரணைப் பொருந்த நின்று போர் புரிதலைச் செய்யாராயின் அவரை வெல்லக் கருதிய பகைவரின் எண்ணம் பழுதாகி விடும்

ஆ) ஐந்தாம் குறள் தொடக்கம் ஏழாம் குறள் வரையான குறள்களின் விளக்கம்

- முதலையானது ஆழமுடைய நீரில் இருக்கும் போது எத்தகைய பகையையும் வென்றுவிடும் அந்த நீரில் இருந்து வெளியே வந்தால் அதனைப் பிற பிராணிகள் வென்று விடும்.
- நிலத்தில் ஓடக்கூடிய வலிமை மிக்க சக்கரங்களை உடைய பெரிய தேர்களும் கடலிடத்தே ஓடமாட்டா கடலில் ஓடக்கூடிய பெரிய தோணிகளும் நிலத்தில் ஓடமாட்டா அது போல ஒவ்வொருவருக்கும் அவரவர்க்குப் பொருத்தமான இடத்தில் தான் வலிமை காணப்படும்
- பகைவரை வெல்லத்தக்க செயல்களை எல்லாம் முடிவாக எண்ணி அவற்றைப் பொருத்தமான இடத்திலிருந்து அரசன் செய்வானாயின் அச் செயலுக்கு தம் வலிமை அல்லாது வேறொரு துணை வேண்டுவதில்லை.

agaram.lk

இ) ஒன்பது தொடக்கம் பத்து வரையான குறள்களின் விளக்கம்

- பகைவரிடம் பாதுகாப்பான அரணும் பெருமை உடைய வலிமையும் இல்லாவிடின் அவர்கள் உறைகின்ற நிலத்தில் சென்று அவர்களை தாக்கி அழித்தல் அரியதாகும்.
- பாகனுக்கு அடங்காமல் வேலைத்தாங்கிய போர் வழுரர்களை கொம்பினாற் குத்திக் கோத்த வலிமை மிக்க ஆண் யானை கால்கள் புதையக் கூடிய சேற்று நிலத்தில் அகப்படின் சிறிய நரியும் அதனைக் கொன்று விடும்.

ஈ) ஐந்தாம், ஆறாம் குறள்களில் பிறிது மொழிதல் அணி கையாளப்பட்டுள்ளது. ஒரு கருத்தினைக் கூறி அதன் மூலம் பிரதான கருத்தைக் கூறாமலே விளக்குவதுபிறிது மொழிதல் அணியாகும்.

- வலிமை மிக்க மன்னனும் தனக்குரிய காப்பிடம் இன்றிப் போர் புரிவானாயின் வலிமை குன்றிய பகைவரும் அதனை வென்றுவிடுவர் என்பதனை விளக்க முதலையை எடுத்துக் காட்டாக காட்டப்பட்டுள்ளது. முதலையானது நீரில் இருக்கும் போது எத்தகைய பகையை வென்று விடும் நீரிலிருந்து வெளியேறினால் அதனை ஏனைய பிராணிகள் வென்று விடும். எனக் கூறி முதலையினூடாகப் பிரதான கருத்து விளக்கப்பட்டுள்ளது.
- நிலத்தில் ஓடக்கூடிய வலிமை மிக்கச் சக்கரங்களை உடைய பெரிய தேர்களும் கடலில் ஓடமாட்டா அது போல கடலில் ஓடக்கூடிய பெரிய தோணிகளும் நிலத்தில் ஓடமாட்டா எனக் கூறி அதனூடாகப் பிரதான கருத்தான அவரவர்க்குப் பொருத்தமான இடத்திலேயே அவரவர் வெற்றி பெற முடியும் என்பது கூறப்பட்டுள்ளது.

(4x5=20 புள்ளிகள்)

4) அ) குகனும் பரதனும் ஒருவரை ஒருவர் சந்தித்து வணங்கித் தழுவிக் கொண்டனர்.

- குகன் பரதனிடம் இங்கு வந்து சேர்ந்தமைக்கான காரணத்தை வினவுகின்றான்
- பரதன் முழு உலகு அளித்த தந்தை முந்தை போர் முறையினின்று வழுவினன் அதனை நீக்க மன்னனைக் கொணர்வான் என்று தனது உள்ளக் கருத்தை கூற பரதனைக் குகன் வணங்கிப் பாராட்டி நெகிழ்தல்
- புகழுடையவனே ! தாயாகிய கைகேயியின் வாழ்த்துக்களைக் கொண்டு உன் தந்தை அளித்த அரசாட்சியை தீவினை வந்து சேர்ந்தது போலக்கருதி கவலைகொண்டு இங்கு வந்தாய் உனது நல்ல இயல்புகளை ஆராய்ந்து பார்தால் ஆயிரம் இராமனுக்கு நீ சமனாவாய் ஏழை வேடன் ஆகிய நான் உன்னை எவ்வாறு புகழ முடியும் உங்கள் சூரிய வம்சத்து முன்னைய அரசர்களது எல்லாப் புகழையும் உனது புகழுக்குள் அடங்குமாறு செய்து கொண்டாய் எனக் கூறி பரதனுக்கு நல்லுபசரிப்புக்களை செய்தான்.

ஆ) இராமன் சென்ற தென் திசையை நோக்கி தன் சிவந்த கைகளைக் குவித்து வணங்கினான்.

- இராமன் தங்கி இருந்த இடம் எது எனப் பரதன் குகனிடம் வினாவினான்
- இாமன் தங்கிய இடத்தைக் குகன் காட்டியதும் மேகம் போல விரைவாகச் சென்று கற்களிடையே பரப்பட்ட புற்களால் ஆகிய படுக்கையைப் பார்த்து துடிதுடித்துத் துன்பப்பட்டான்.
- இராமா உனக்கு இவ் வனவாசமாகிய துன்பம் என்னாலேயே ஏற்பட்டது இதனை அறிந்தும் எனது உயிர் போகவில்லையே இதற்கு அப்பால் உனது திருமுடியையும் சூடிக்கொண்டு அரசாட்சியையும் ஏற்றுக் கொள்வேனா எனத் தன்னைத் தாழ்த்தி கூறுகின்றான்.

இ) இலக்குவன் இரவுப் பொழுதைக் கழித்த இடம் எது என வினாவினான்

- இலக்குவன் இரவு முழுவதும் உறக்கம் இல்லாது இராமனும் சீதைப்பிராட்டியும் உறக்கம் கொள்ள விடியும் வரையும் கண்கள் இமையாமல் காவல் செய்தான் எனக் கூற அவனின் அன்பை வியந்து கூறுகின்றான்
- இராமனுக்குத் தம்பிகள் என்று சொல்லும் படி பிறக்கும்போது ஒத்த தன்மையான எங்கள் இருவரிலும் இராமனுக்கு பெருந்துன்பம் விளையக் காரணமாகி விட்டேன் ஆனால் நீ அத்துன்பம் நீங்குவதற்குத் துணையாக நின்றாய் உனது அன்புக்கு எல்லை உண்டோ‌ன் எனக் கூறி நின்றான்.

ஈ) உவமை அணி

1. அருள்தருவாரி அன்ன செவ்வழி உள்ளத்து அண்ணல் …….. என்ற தொடரில்
   உவமானம் - அருள் தரும் வாரி
   உவமேயம் - பரதன்

2. கார் எனக் கடிது சென்றான் …. எனும் தொடரில்
உவமானம் - கார் (மேகம்)
உவமேயம் - பரதன்
3. தூண் தர நிவந்த தோளான் ……….
உவமானம் - தூண்
உவமேயம் - பரதனது தோள்கள்
4. அல்லை ஆண்டு அமைந்த மேனி
உவமானம் - இருள்
உவமேயம் - இராமனின் மேனி நிறம்
உருவக அணி – புகழ்க்கற்றை, சேவடிகமலப்பூவில்

(6+6+4+4=20 புள்ளிகள்)

5) அ)

- பிரதான தொழில் பால்சேகரித்து தயிர் ஆக்கி காவுதடியில் விற்றல்
- மண்பீங்கான் தட்டில் உணவு உண்ணல்
- வீடுகளில் இடுக்களைக்கு மேலே பரண் அமைத்தல்
- வெற்றிலை, பாக்கு, புகையிலை போடுதல் சரை கட்டி வைத்தல்
- சுருட்டுக் குடித்தல், சாராயம் குடித்தல்
- ஆண்கள் நாலு முழ வேட்டியும் சேட்டும் அணிதல்
- வீட்டு நிலையில் வீபூதிச்சிரட்டையை தொங்கவிட்டு வீபூதி அணிதல்
- பெண்பிள்ளைகளுக்கு பூப்புனித நீராட்டுச் சடங்கு செய்து ஒலிபெருக்கியை முடுக்கி விடல்
- இரவு வேளைகளில் தென்னோலைச் சூள் வெளிச்சத்தில் ஆற்றோரங்களில் நண்டு குத்துதல்
- பூதாக்கலச் சோறு போட்டுச் சுருக்கமாகக் கல்யாணம் செய்தல்
- கோயிற் பூசாரியார் சங்கு, முரசு இவற்றின் மூலம் நேரம் அறிவித்தல்.
- வயற் காணிகளைப் பெண்களுக்கு சீதனம் கொடுத்தல்
- பிட்டு, நண்டுக்கறி, புக்கை, இராசவள்ளிக்கிழங்கு, இடியப்பம் போன்ற உணவுகளை உண்ணுதல்
- வேப்பம் குச்சியால் பல் துலக்குதல், இறந்தவர்களின் நினைவாக ஆண்டுத்திவசம் செய்தல், நுளம்புக்கு வேப்பம் புகை இடல்
- வயலில் வேலை செய்வோருக்குப் பனையோலைப் பெட்டியில் சாப்பாடு கொண்டு செல்லல்
- வருடப்பிறப்பிற்கு கைவிசேஷம் வழங்குதல்
- ஆட்டிறைச்சியைப் பங்கு போடல்

ஆ) தங்கள் காதல் நிறைவேறுவதற்காக தாமோதரமும் சௌந்தரமும் காத்திருத்தல்
- கல்விக்காகக் காத்திருத்தல் - சின்னத்தம்பி வாத்தியார் ஆலங்கேணி மக்களின் கல்வியிலும் அவர்களை ஆசிரியர்களாக்கி கல்வி ஒளி கொடுப்பதற்காகக் காத்திருத்தல்
- ஆலங்கேணி மக்கள் அகதிகளாகி முகாம்களிலும் வேறு இடங்களிலும் தங்கியிருந்து சொந்த ஊருக்குத் திரும்பச் செல்லக் காத்திருத்தல்
- ஆண்கள் பலரும் மதுவருந்தி வாழ்நாளைக் கழிப்பதனால் மதுவில் இருந்து விடுபடக் காத்திருத்தல்

(10+10=20 புள்ளிகள்)

6) அ) அதிகமான பிள்ளைகள் - வீட்டுப்படிமுதல் வீசம்வரை சிறியவர்களும் பெரியவர்களும் நிற்றல்
- அவர்களின் தோற்றம் - தேய்ந்து துருப்பிடித்தவைப் போல் காணப்பட்டார்கள் சில குழந்தைகளுக்கு உடையுண்டு சிலருக்கு உடை இல்லை.
- அடிக்கடி குழந்தைகள் நோய் வாய்ப்படல் கிழிந்த துணியில் படுத்துக் கிடக்கும் நோய்வாய்ப்பட்ட குழந்தைகளின் காட்சி.
- இன்ஸ்பெக்டர் இருப்பதற்கு கிழிந்த பாயை எடுத்து போடுதல்.
- சவுக்கு மரம் வைப்பதற்கு சர்க்கார் கொடுத்த பணத்தை குடும்பத்தின் வறுமை நிலைக்கு எடுத்து பயன்படுத்தல்.

agaram.lk

ஆ)

- அரசாங்கத் தோட்டத்தில் சவுக்குப் பயிரிடும் பணியிலுள்ளவர்
- மிகவும் வறுமையான நிலையில் நிறையப் பிள்ளைகளுடன் வாழ்பவர்
- சம்பளப்பணத்தைத் தவிர சில்லறை சம்பாதிக்கத் தெரியாதவர்
- தான் செய்வது தவறு என்று அறிந்தும் வறுமை காரணமாகச் சர்கார்ப் பணத்தை எடுத்துச் செலவு செய்தவர்
- இன்ஸ் பெக்டர் வீடு தேடி வந்து சவுக்கைப் பயிரிடாததற்கான காரணம் கேட்ட போது நடுக்கத்துடன் "சார் ஒன்று சொல்லுறேன் நீங்கள் கடவுள் மாதிரி பெரிய மனசு செய்தாலொழிய கெட்டு விடுவேன்" என்று உண்மையைக் கூறி நின்றவர்
- மீண்டும் இன்ஸ்பெக்டர் வீட்டுக்கு வந்து இரண்டு மாதத்திற்குள் வைத்து விட்டீரே எனக்கு ஆபத்தை கொண்டு வந்து விட்டீரே எனக் கேட்டபோது பக்கத்து பங்களாக்காரர் தான் பிழைக்கச் செய்தவழி என விபரத்தை ஒழிக்காது நேர்மையுடன் கூறியவர்
- வறுமை காரணமாக தவறு செய்தாலும் அதற்காக உண்மையாக வருந்தியவர்.

இ)

- சிறிய சிறிய வசனங்களைப் பயன்படுத்தியிருத்தல்
- வட சொற்பிரயோகம் சில ஆங்கிலச் சொற்பிரயோகம்
- பொருத்தமான வர்ணனைகள் மூலம் பாத்திர உணர்வுகளை முன்னிறுத்தல்
  உ + ம் கொடியை சுற்றிக் கிடக்கும் சீந்தில் கொடி.
- உவமைத் தொடர் பயன்பாடு
  உ + ம் தேன் சிட்டு ஒன்று லோலோக்கைப் போல தொங்கிக் கொண்டிருந்தது
- கதை கூறுபவராக சிறுகதையாசிரியர் விளங்கினாலும் இடையிடையே பேச்சு வழக்கில் உரையாடல்களும் இடம் பெறுகின்றன.
- உணர்ச்சிச் செறிவான சொற் பிரயோகம்
  உ + ம் ஒருநாள் கஷ்டமானால் சொல்லிக் கொள்ளலாம் ஓயாத கஷ்டத்தை பற்றிப் பிறரிடம் சொல்லி என்ன செய்வது (8+6+6=20 புள்ளிகள்)

7) அ)

- தமிழ் இலக்கியம் மனித அனுபவத்தை பேசுவதை உணராமல் காட்சிப் பொருள் பற்றிய அடிப்படையில் விமர்சிப்பதாக உள்ளது.
- ஆங்காங்கே கண்ணில் தென்படும் காட்சிப் பொருள், புறநிகழ்ச்சி ஆகியவற்றை விட அவற்றைக் காண்கின்ற உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளுக்கும் சிந்தனைகளுக்கும் தமிழ் இலக்கியம் இடம் கொடுக்கவில்லை உ+ம் :- "கொங்கு தேர் வாழ்க்கை……."
- பழைய இலக்கியண ஆசிரியர்களின் கொள்ளைகளில் இலக்கிய விமர்சனத்திற்குரிய பண்புகள் சூத்திரங்களில் காணப்பட்டன.
- பிற்காலத்தில் பழைய இலக்கணக்காரரின் நல்ல கோட்பாடுகளை புறக்கணித்து விட்டு நக்கீரர் பாணியில் குற்றம் காணுவதே இலக்கிய விமர்சனத்தில் முக்கியம் பெற்றுள்ளது.
- பழைய இலக்கண விதிகள் இலக்கியத்தின் கருவியாகிய மொழியைப் பற்றியவை ஆனால் மேல்நாட்டில் அரிஸ்டாட்டில் காலத்தில் இருந்து இன்று வரை ஆராய்ந்திருப்பது போல் பொருளின் தன்மையை அடிப்படையான முறையில் தமிழில் ஆராயாப்படவில்லை
- சாத்துக்கவிகள் ஒரு நூலின் பெருமையை பொதுப்படக் கூறினாரேயல்லாமல் விமர்சனக்கருத்தை முன்வைக்கவில்லை

ஆ)

- தத்துவரீதியான இலக்கண விமர்சனம் - மொழியின் பண்பை அடிப்படையாகக் கொண்டது
- சரித்திர ரீதியான இலக்கிய விமர்சனம் - ஒருகால இலக்கியத்திற்கும் இன்னொரு கால இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பையும் எவ்வாறு புதிய புதிய வகைகள் தோன்றின என்பதையும் ஆராய்வது
- வாழ்க்கைச் சரித்திர ரீதியிலமைந்த இலக்கிய விமர்சனம் - ஒருவனது சமுதாய அனுபவமே இலக்கியம் ஆவதால் அவனது வாழ்க்கை வரலாற்று தாக்கங்களை ஆராய்வது
- ஒப்புமை ரீதியிலான இலக்கிய விமர்சனம் - ஒரு புலவனுக்கும் இன்னொரு புலவனுக்கும் இலக்கியப் பண்பை பொறுத்த வரையுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வது

agaram.lk

இ)

- வாசகனோடு உரையாடும் பாங்கில் விடயங்களை எடுத்துரைத்தல்
  உ+ம் ''அருமையான பாட்டென்று நீங்களும் நாங்களும் நினைக்கின்றோம்''
- நக்கீரனது கதையைக் கூறி அக்கதையின் மூலம் விமர்சனம் பற்றிய விளக்கங்களை எடுத்துரைத்தது
- இறையனாரின் குறுந்தொகைச் செய்யுள், நம்மாழ்வாரின் பெருமை, பாராட்டும் செய்யுள் ஆகியவற்றையும், நக்கீரன் கதை, புகழேந்தியார் பாடற் கதை ஆகியற்றையும் கட்ரையின் எடுத்துக்காட்டுகளாகச் சுவையான விளக்கங்களுடன் இணைத்துத்தந்துள்ளமை
- இயன்றளவு தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியதுடன் குறைந்தளவு வட சொற்களையும் சேர்த்துக் கொண்டு சுவைபடக் கட்டுரையை தந்தமை
- சிறியதும் பெரியதுமான வாக்கியப் பயன்பாடு
- ஆங்கிலச் சொற்கலப்பின்றி அமைந்துள்ளது
- கதையாகத் தொடங்கி கருத்துக்களால் அணிசெய்து தர்க்கரீதியான எடுத்துரைப்புக்களால் செவ்வைப்படுத்திச் சுவையான முடிவுரையுடன் படைத்துள்ளார்.

8) அ)

- திருமாலை நேரில் கண்டதும் ஆவலோடு காத்திருந்த போது மனக்கண்ணால் திருமால் திருவுருவைக் கண்டவர்.
- திருமாலை திருவடியிலிருந்து திருமுடிவரை அவரது அழகை உள்ளத்தில் பதிந்திருந்தவர்
- திரு வேங்கட மலையின் இயற்கைத் தோற்றத்திலே அழகாக ஈடுபட்டவர்
- திருமாலின் திரு உருவைக் கண்ட கண்களால் வேறு ஒன்றையும் பார்க்க விரும்பாதவர்
- திருமாலின் திரு உருவ அழகை எல்லோரும் காண வேண்டும் என விரும்பியவர்
- இசையோடு பாடல்களை இசைத்து பக்தி உணர்வைத் தூண்டியவர்
- மனதில் செய்யும் வழிபாட்டால் இறைவனைக் காணலாம் என்ற நம்பிக்கை ஊட்டியவர்
- இறைவன் அழகிலே மனதைப் பதிய வைத்து ஒரு புதிய பக்திப் பரவசத்தை அடைய வழி காட்டியவர்.

ஆ)

- பூரணச் சந்திரன் கிழக்குத் திசையிலும் மறைகின்ற சூரியன் மேற்குத் திசையிலும் மலைப் பெண்ணின் வெள்ளி வெண்தோடாகவும் தங்கத் தோடாகவும் காணப்படல்
- அன்னப் பெடையை தாமரை மலர் மூடிக்கொள்ள அன்னச் சேவலானது அதனைக் கிழித்து மீட்டுக் கொண்டு தென்னையில் அமர்தல்.
- குவளை மலர்களை மேய்ந்த பசுக்கள் பொழிகின்ற பால் அவை நடந்து செல்லும் பாதையிலுள்ள புழுதிகளைத் தணித்தல்
- அந்தணர்கள் செந்தீ வளர்த்ல், மகளிர் வீடுகளில் விளக்கு ஏற்றுதல்
- பாணர்கள் யாழ் மீட்டி மருதப் பண்ணிசைத்தல், இடையர்கள் வேய்ங்குழலில் முல்லைப் பண்ணிசைத்தல்
- போர்க்களத்தில் கணவனை இழந்த பெண் தனது உறவினர் இல்லம் செல்வதைப் போல அந்திப் பொழுது புகார் நகரை வந்து சேர்தல்

இ)

- இடையர்கள் குல ஆண்களும் பெண்களும் வேத முதல்வனாகிய யேசுவின் பாதங்களில் விழுந்து வணங்கும் போது மிக்க மகிழ்ச்சியடைந்தவர்களாய் விளங்கினர்
- இடையர்கள் உலகப் பொருள்களில் ஆசையற்றவர்களாய் முல்லை மலர் மாலையும் கையுமாக யேசு பிறந்துள்ள அந்த இடத்தில் வந்து குடி கொள்ளலானார்கள்
- யேசுவின் காட்சியைக் கண்டு முகர்ந்து இன்பம் மிகுந்து உணர்ச்சிவசப்பட்டு யேசுவோடு பலவாறு பேசினார்கள்
- யேசுவையும் மரியாளையும் வாழ்த்தினார்கள் குழந்தை யேசுவிற்கும் மரியன்னைக்கும் ஆர்வம் மிகுந்து காணிக்கை செலுத்தினார்கள
- காணிக்கை செலுத்தும் போது யேசுவின் முகத்தில் ஏற்பட்ட மலர்ச்சியால் மலர்ந்து தேவ லோகத்திற்கு நிகரான இன்பம் அனுபவித்தார்கள்.
- அவர்களை விட்டு பிரிய மனம் இல்லாதவர்களாய் ஒவ்வொரு நாளும் வந்து தரிசித்தார்கள்.

agaram.lk

ஊ)

- இறையருள் பொங்குகின்ற நாடு
- தேவர்கள் தினமும் வந்து கூடுகின்ற தவமுடைய நாடு
- இறையருளால் வானவர் பூமிக்கு வந்து க.்.பா அமைந்த நாடு
- சூரியனும் சந்திரனும் மேலாகச் செல்லாது விலகி ஓடும் நாடு
- மூசாநபி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மழை பொழிந்த அற்புதச் சிறப்புடைய நாடு
- ஆறு லட்சம் வானவர்கள் இறங்கி ஹஜ்முழக்கிய நாடு
- பல்வேறு பிரிவுகளாய் வேறுபட்டிருந்த மக்கள் ஒன்றுபட்டு மனம் தெளிவு பெற்று வணங்கியமை முதல் மனிதனாகிய ஆதம் அவரது முதல் மனைவியான ஹவவா இருவரையும் சேர்த்து வைத்தமை
- சிறப்புடைய பல மலைகளால் சூழப்பட்ட நாடு
- சம்சம் அமைவுற்ற நாடு
- முகமது நபிகளால் ஆளப் பெற்ற நாடு.

உ)

- பாரதியார் தன்னைக் காதலனாகவும் கண்ணனைக் கண்ணம்மா என்னும் காதலியாகவும் கருதிக் கற்பனை மீதுறப் பாடியுள்ளார்
- தெய்வீகக் காதலை மானிட நிலையில் உணர்ச்சி ததும்ப வெளிப்படுத்தியுள்ளார்
- கண்ணனின் மீதான காதல் உணர்வை வெளிப்படுத்துவதற்கு இயற்கையை சிறந்த ஊடகமாக்கி கடல், வானம், நீர்க்குமிழி இவற்றில் காதலியின் முகத்தைக் காண்பதற்காக காதல் உணர்வை வெளிப்படுத்தல்
- காதலியின் வினாவுக்கு காதலன் விடையளிப்பது போல் உரையாடல் பாங்கில் காதல் உணர்வை வெளிப்படுத்தல்
- உணர்ச்சி பொங்கும் மொழிநடைப் பிரயோகம்

  உ+ம் திருமித்தழுவி, வாங்கிவிடடி, உவகையூற்றல்

  தன்னை மறந்த லயந்தன்னில் போன்ற சொற்பிரயோகங்கள் மூலம் காதல் உணர்வை வெளிப்படுத்தல்

(2x10=20 புள்ளிகள்)

agaram.lk

| தரம் :- 13 (2019) | தமிழ் - II | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

**1)**

| | | | |
|---|---|---|---|
| 1) | 1 | 11) | 1 |
| 2) | 3 | 12) | 2 |
| 3) | 2 | 13) | 1 |
| 4) | 4 | 14) | 3 |
| 5) | 5 | 15) | 2 |
| 6) | 1 | 16) | 4 |
| 7) | 4 | 17) | 5 |
| 8) | 3 | 18) | 2 |
| 9) | 3 | 19) | 3 |
| 10) | 5 | 20) | 4 |

(20x1 =20 புள்ளிகள்)

**2)** அ)

- எழுத்துக்கள் சில சேர்ந்து சொற்களாக அமைகின்றன. அவ்வாறு அமையும் முறையில் எளிமையும் உண்டும் அருமையும் உண்டு.
- திராவிட மொழிகளில் ஒலிகளை ஒதுக்கி வைத்திருக்கின்றன.
- சில மொழிகள் பிறமொழியின் சொற்களை அவ்வாறே ஏற்றுக்கொண்டுள்ளன.
- ஆனால் தமிழ் மொழி அவ்வாறல்லாது திராவிட ஒலி முறைக்கேற்ப அமைத்துக் கொண்டுள்ளது. இதனால் அதன் ஒலியமைப்பு மாறாது உள்ளது.
- தமிழ் மொழியில் உயிரும் மெய்யும் மொழிக்கு முதலில் ஒலிக்கின்றன. ஏனைய மொழிகள் அவ்வாறு ஒலித்தற்கு அரியனவாக உள்ளன.

(13 புள்ளிகள்)

ஆ

I. சில அசைவுகள் செவிப்புலனைத் தாக்குவதை உணரும் போது ஒலி பிறக்கின்றது.
II. மொழி என்பது பேசுவோரின் குரலில் பிறந்து பொருளுடைய அறிகுறிகளாக அமைந்து கேட்போரால் பொருள் உணரப்படுமாயின் அது மொழியாகும்.
III. …………
IV. ஒலி
V. தொன்று தொட்டு அறிகுறிகளாக அமைந்து வழிவழியாக வளர்ந்து பயன்படுத்துவதால் மொழிக்கு வரலாறு உண்டாகின்றது.
VI. பேசுவோரும் கேட்போரும் அறிந்து போற்றுமாறு பொதுவான தன்மைகளும் குறியீடுகளும் கொண்டு விளங்கும் போது அது ஒரு மொழியாகின்றது.

(2x6 = 12 புள்ளிகள்)

**3)** அ) மனித விழுமிய மேம்பாடும் இலக்கியமும்.

- இலக்கியம் என்றால் என்ன? மனித விழுமியம் என்றால் என்ன?
  இவை பற்றிய அறிமுகம்.
- இலக்கியத்தின் முதன்மைப்பயன் மனித விழுமிய மேம்பாடே ஆகும்.
  - அறம்
  - பண்பாடு
  - அன்பு

egaram.lk

- மனித நடவடிக்கைகளை புரிந்து கொள்ளவும் பிறருக்கு பயன்பட வாழவும் இலக்கியங்கள் வழிகாட்டுகின்றமை.
- மனித விழுமியங்களைப் பேசும் இலக்கியங்கள் - சங்ககாலம் தொடக்கம் தற்கால இலக்கியம் வரை.
- இலக்கியங்கள் எடுத்துக்காட்டும் மனித விழுமியங்கள்
  - ★ அன்புடைமை
  - ★ பணிவுடைமை
  - ★ மன்னித்தல்
  - ★ உயிர்களிடத்தில் அன்பு
  - ★ உலக சகோதரத்துவம்.

ஆ I.

- சாதாரணதரக்கல்வியும் மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினை பற்றிய அறிமுகம்.
- உயர்கல்விப் பிரச்சினை
- சாதாரணதரக்கல்வியை தொடர்ந்து உயர்தரக்கல்விக்குரிய துறை, அதில் அவர்கள் தெரிவு செய்யும் பாடங்கள்.
- கணித பாடசித்தியின் அவசியம் அது இன்மையால் ஏற்படும் உளத்தாக்கம்.
- கணித பாடச்சித்தியில்லாத மாணவர்களும் உயர்தரவகுப்பிற்கு தகுதியற்ற மாணவர்களுக்குமான தொழிற்கல்வி அரச பாடசாலைகளில் கல்வியமைச்சின் அனுமதியுடன்.
- உயர்கல்வியில் தொழில்நுட்பவியல் பாடம் தெரிவின் ஏற்புடைமை.
- சாதாரணதரக்கல்வியின் பின் அரசசார்பற்ற பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் பயிற்றப்படும் தொழிற் கல்வி டிப்ளோமா
- தொழில்நுட்பக் கல்லூரியின் பாடத்தெரிவுகள்.

II.

- குடும்பத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்
- சாதாரணதரக்கல்வியின் பின் குடும்பச்சூழல் பிள்ளைகள் வேலைக்கமர்த்தப்படல்
- பெண்பிள்ளைகள் இளவயதுத் திருமணத்திற்கு ஆளாகுதல்
- பெற்றோர்களினால் கல்வியா, வேலையா என்ற நிர்ப்பந்தத்திற்க்கு உள்ளாதல்.

III.

- சமூகப்பிரச்சினை :-
  உயர்தரக்கல்வியின் வேலையும் இன்றி சமூகத்தில் தவறான வழிக்குச் செல்லப்பட்டு சமூக விரோத குழுக்களாகவும் போதைப்பொருட் பாவனைக்கும் அடிமையாதல்.

agaram.lk

இ

- மொழியும் பண்பாடும்
- மனித வரலாற்றுக் கண்டுபிடிப்புக்களில் மிகச்சிறந்தது மொழியாகும்.
- இது கருத்துப் பரிமாற்ற ஊடகம் சிந்தனையின் சிறந்த கருவி
- மொழிப்பண்பாட்டினை வெளிப்படுத்தவும் - மொழிப்பண்பாட்டின் கண்ணாடி
- பண்பாட்டு வளர்ச்சியில் மொழியின் செல்வாக்கு அதிகம்.
- சமூகவளர்ச்சி - இலக்கியவளர்ச்சி – மொழிவளர்ச்சி என்பன ஒன்றில் தங்கியுள்ளமை.
- மொழி என்பது பண்பாட்டுக்கருவி – சமூகவிழுமியங்கள் ஆன்மீகச் சிந்தனைகள் அரசியல் முதலான அனைத்தும் அடுத்த சந்ததிக்கு கையளிக்கப்படுவது மொழியினாலே தான்.
- பண்பாட்டு வேறுபாடுகள் மொழியூடாகப் புலப்படும்.

ஈ கழிவு முகாமைத்துவம் :-

- கழிவு முகாமைத்துவம் என்றால் என்ன?
- கழிவுமுகாமைத்துவத்தில் அரசாங்கத்தின் செயற்பாடு
- கழிவுமுகாமைத்துவத்தில் சமூகத்தின் செயற்பாடு
- கழிவு முகாமைத்துவத்தில் இடம் பெறும் மீள்சுழற்சிப் பயன்பாடுகள்
- கழிவு முகாமைத்துவத்தைச் சரியாகக் கொள்ளாமையால் ஏற்படும் தீமைகள்
- கழிவுமுகாமைத்துவத்தை திட்டமிட்டுச் செய்வதினால் ஏற்படும் சாதக விளைவுகள்.

உ. யாரையும் மதித்துவாழ்.

- எல்லோருக்கும் சுயமரியாதையுணர்வு உண்டு.
- ஆகவே எல்லோரையும் மதித்து வாழ வேண்டும்.
- பிறரை மதியாதவன் பிறரால் மாத்திரம் அன்றி தன்னாலும் மதிக்கப்படமாட்டான்.
  "மானுடம் போற்ற மறுக்கும் ஒரு - மானிடன் தன்னை
  தன் உயிரும் கொல்லும்"
- இனம், மதம், தேசம்,வர்த்தகம், பால், வயது முதலானவற்றின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வு பார்த்து மதித்தல் தகாது.
- பிறரை மதிக்காது நடப்பதால் பகைமை விளையும்
- சமூகவிரோத மனப்பான்மை வளரும்
- சமூக ஒற்றுமை குலையும்.

(25 புள்ளிகள்)

## பகுதி - II

**4)** அ. பதிணெண்கீழ்கணக்கு நூல்கள்

| <u>**அறநூல்கள்**</u> | <u>**அகத்திணைநூல்கள்**</u> | <u>**புறத்திணைநூல்கள்**</u> |
|---|---|---|
| திருக்குறள் | காற்நாற்பது | களவழி நாற்பது. |
| நாலடியார் | ஐந்தினை ஐம்பது | |
| நாண்மணிக்கடிகை | ஐந்தினை எழுபது | |
| இன்னாநாற்பது | திணைமொழி ஐம்பது | |
| இனியவைநாற்பது | திணைமொழி நூற்றைம்பது | |
| திரிகடுகம் | கைந்திலை | |
| ஆசாரக்கோவை | | |
| பழமொழிநானூறு | | |
| முதுமொழிக்கஞ்சி | | |
| சிறுபஞ்சமூலம் | | |
| ஏலாதி | | |

- காப்பியங்கள் - சிலப்பதிகாரம் , மணிமேகலை
- பிரபந்தங்கள் / பக்தி இலக்கியங்கள்
  அற்புதத்திருவந்தாதி
  திருவிரட்டை மணிமாலை
  தருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம்
  முதலாழ்வார் பாசுரங்கள்.

aigaram.lk

ஆ.

- சங்ககால இலக்கியங்கள் காதலையும் வீரத்தையும் (அகம்,புறம்) அடிப்படையாகக் கொண்டு விளங்க சங்கமருவிய கால இலக்கியங்கள் சங்க காலத்தில் இல்லாத அறப்போதனைகளை பெருவழக்காக கொண்டுள்ளன.
- சங்கபாடல்கள் பெரும்பாலும் தனிநிலைசெய்யுட்களாக அமைய சங்கமருவியகாலப் பாடல்கள் தொடர்நிலைச் செய்யுட்களாக அமைந்தன.
- சங்கப் பாடல்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பன சங்கமருவிய காலப்பாடல்கள் எடுத்துக் கொண்ட பொருளை விரிவாக வலியுறுத்திக் கூறும் இயல்பினைக் கொண்டவை.
- சங்கப்பாடல்கள் அகவற்பா வஞ்சிப்பாவினால் அமைய சங்கமருவிய காலப்பாடல்கள் வெண்பா, விருத்தப்பாவில் அமைந்தன.
- சங்ககால இலக்கியங்கள்.

இ.

- சங்கமருவிய காலப் பிற்பகுதியிலேயே முதன்முதலாகக் காபபியங்கள் தோற்றம் பெற்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை
- சங்ககால தொடர்நிலைச் செய்யுள்களின் வளர்ச்சி காவியங்களின் தோற்றப்பாட்டிற்கு அடிகோலாயிற்று
- கதைக்கரு ஒன்றை மையமாகக் கொண்டு பல சமயங்களை இணைத்து காவியங்கள் உருவாகின.
- சமய உள்ளடக்கங்களைக் கதைகள் மூலம் சொல்லும் மரபு உருவானது.

(3x5= 15 புள்ளிகள்)

**5)** அ.

- பரணி - மோகவதைப்பரணி, பாசவதைப்பரணி, அஞ்ஞைவதைபரணி
- உலா - திருவரூருலா,திருக்காளத்திநாதருலா,ஏகாம்பநாதருலா, மதுரைசொக்கநாதருலா
- கலம்பகம் - மதுரைக்கலம்பகம், காசிக்கலம்பகம், தில்லைக்கலம்பகம், கச்சிக்கலம்பகம்
- பிள்ளைத்தமிழ் - மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்
- நான்மணிமாலை – நால்வர்நான்மணிமாலை, திருவாரூர்நான்மணிமாலை
- மும்மணிக்கோவை – பண்டாரமும்மணிக்கோவை, சிதம்பரமும்மணிக்கோவை,
- தூது – சிவஞானமாலைய சுவாமிகள், நெஞ்சுவிடுதூது

ஆ.

- பொதுமக்கட் சார்பான இலக்கியம் பற்றிய அறிமுகம்
  பள்ளு, குறவஞ்சி, அம்மானை, கீர்த்தனை, நொண்டிநாடகம்,
  உதாரணம் :- முக்கூடற்பள்ளு, திருக்குற்றால குறவஞ்சி
- நாடகப்பாங்கு
- இசைப்பாங்கு
- நகைச்சுவைப் பாங்கு
- மொழி எளிமை (பேச்சுமொழிப்பயன்பாடு)
- சமயத்தை பொதுமக்கள் மயப்படுத்தல்
- அடிநிலை மக்கள் வாழ்க்கையை பிரதிபலித்தல்

இ

- தாயுமானவர் ,தத்துவராயர், காளமேகம், இரட்டையர், அதிவீரராமபாண்டியர், படிக்காசுப்புலவர், முதலிய புலவர்களது தனிப்பாடல்களும் செய்யுள் எடுத்துக்காட்டலும்.
- மன்னர், மக்கள், கடவுள் மீது வசைப்பாடுவனாக இருந்தமை
  காளமேகப்புலவர்கள் பாடல்கள் (உ+ம்) காரென்றுபேர்படைத்தாய்….
- தமது திறமையை நிறுவ பிறரால் புரிந்து கொள்ளவும் விளங்கிக் கொள்ளவும் முடியாத தத்துவத்தன்மையுடையன.
  சுந்தரக்கவிராயர் பாடல் (உ+ம்) மரமது மதுமரத்தில் ஏறி…..
- சிலேடை, மடக்கு அணிகள் பயன்படுத்தப்பட்டன.
- யாக்கை, பொருள் என்பவற்றின் நிலையாமையை வெளிப்படுத்தி இரட்டையர் பாடல் (உ+ம்) அப்பிலே தோய்த்து இட்டு……..
- பிறரை கிண்டலும் கேலியும் செய்யும் வகையிலானவை.
- இராமச்சந்திரக்கவிராயர் பாடல் (உ+ம்) கலவைதான்மண்ணைதான்…..

(3x5= 15 புள்ளிகள்)

**6)** அ.

- ஈழத்துப் பூதத்தேவனார் சங்ககாலம்
- அனுராதபுர நானுநாட்டார் கல்வெட்டுப்பா
- பதவியா, பண்டுவஸ்நுவர , கோட்டகம கல்வெட்டுக்கள்
- நீண்ட கால இடைவெளியின் பின்னர் ஆரியச்சக்கரவர்த்திக்காலத்து இலக்கிய முயற்சிகள் சமயம், வரலாறு, சோதிடம் , மருத்துவம் சார்ந்த இலக்கியங்கள்
  சோதிடநூல் , சரசோதி மாலை, செகராசசேகரமாலை
  வைத்திய நூல் - செகராசசேகரம், பரராசசேகரம்
  சமயம் சார்ந்தவை – தட்சணகைலாசபுராணம், திருக்ரைப்புராணம், கதிரமலைப்பள்ளு.
  காப்பியம் (மொழிப்பெயர்ப்பு இலக்கியம் - இரகுவம்சம்
  வரலாறு சார்ந்தவை – வையாபாடல் கைலாயமாலை பரராசசேகரன் உலா
  நாட்டார் வழிபாடு சார்ந்தவை – கண்ணகிவழக்குரை
  சிலம்பு கூறல்
  கோவலர் கதை

ஆ.

- சைவசமயச்சார்பானவை – பிள்ளையார் புராணம், ஏகாதசி புராணம், சிவராத்திரி புராணம்.
- கிறிஸ்தவசமயம் சார்பானவை – திருச்செல்வர் காவியம், யோசேப்புபுராணம், மருதப்பக்குறவஞ்சி.
- தலம்சார்ந்தவை – கல்வளை அந்தாதி, மறைசை அந்தாதி, புலியூர்யமக அந்தாதி, குருநாத சுவாமிகள் கிள்ளைவிடுதூது, வெருகல்சித்திர வேலாயுதர் காதல், இணுவில்

சிவகாமி அம்மைபிள்ளைத் தமிழ், வட்டுக்கோட்டை பாட்டியம் பதி , பததிரகாளியம்மை ஊஞ்சல்

- உள்ளூர்ப்பிரபுத்துவம் சார்பானவை – கரவைவேலன்கோவை, தண்டிகைகனகராயன பள்ளு
- வைத்தியம் சோதிடம் சார்பானவை – அமுதாகரம் (வைத்திய நூல்) சந்தானதீபிகை(சோதிடநூல்)
- நாடக இலக்கியம் - வாளபிமன் நாடகம் , அலங்கார ரூபன்நாடகம் அதிரூபாவதி நாடகம்

இ.

- மத சுதந்திரம் நீண்டகால ஆட்சி இவை காரணமாக பெருந்தொகையான இலக்கியங்கள் தோன்றின.
- சமயம் சார்பான இலக்கியங்கள் - இந்து சமயம் சார்பானவை, கிறிஸ்தவசமயம் சார்பானவை
- அம்மானை பள்ளு, காதல், தூது, புராணம், அந்தாதி, காவியம் போன்ற பிரபந்த இலக்கிய வடிவில் கையாளப்பட்டன.
- உரை நடைநூல்கள் தோற்றம் பெற்றன. (உ+ம்) காசியாத்திரை விளக்கம்.
- நாடக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
- நாட்டுப் பெருமை போற்றப்பட்டது
- விருத்தத்துடன் பல வகையான யாப்புக்கள் கையாளப்பட்டன.
- பேச்சு வழக்குச் சொற்கள் பயன்படுத்தப்பட்டன
- இலக்கியங்களில் நகைச்சுவையுணர்வு காணப்பட்டது
- மொழிநடையில் நெகிழ்ச்சித்தன்மை காணப்பட்டது.

(3x5 =15 புள்ளிகள்)

**7)** அ. பேராசிரியர் கைலாசபதி

- கைலாசபதி அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய ஒழுக்கமான அறிமுகம் .
  இடம் - யாழ்ப்பாணம்
  காலம் - (05.04.1933 – 06.12.1982)
- இலக்கிய வரலாற்றையும் சமூகவரலாற்றையும் தொடர்புபடுத்தி நோக்கினார். தமிழ் நாவல் இலக்கியம், பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் அடியும் முடியும்.
- ஒரப்பியல் அணுகு முறையைக் கையாண்டமை :-
  தமிழ் வீரயுகப்பாடல்கள், இருமகாகவிகள், ஒப்பியல் இலக்கியம்.
- இலக்கியம், இலக்கியகோட்பாடுகள் , விமர்சனக் கோட்பாடுகள், பற்றி தெளிவுபடுத்தியமை. இலக்கியமும் திறனாய்வும்.
- சமகால இலக்கியங்கள் பறறிய மதிப்பீட்டை மேற்கொண்டும் இலக்கியத்தின் சமூகப்பயன்பாட்டை வலியுறுத்தியும். இலக்கியவாதிகளை நெறிப்படுத்தியமை ஊக்குவித்தமைஇயக்கரீதியாகச் செயற்பட்டமை (முற்போக்கு எழுத்தாளர் சங்கம்)
- தேசிய இலக்கியத்தை வலியுறுத்தியமை
- முக்கியமான சிலரது சமூக இலக்கியப் பங்களிப்பினை மதிப்பிட்டமை. (பாரதியார், ஆறுமுகநாவலர், விபுலானந்தர்)

ஆ. ஆறுமுகநாவலர் :-

- ஆறுமுகநாவலரது வாழ்க்கை வரலாறு பற்றி அறிமுகம்
- உரைநடைக்கான பங்களிப்பு
- பதிப்பு முயற்சிகள் பிழையின்றிப் பதித்தல்
- பாடப்பதிப்புக்கள்
- இலக்கண நூல்
- செய்யுள் நூல்களை உரைநடையில் ஆக்கியமை
- நூலாக்கமும் நூல்களுக்கு உரை எழுதியமை
- சமூக சமயப் பணிகள்.

இ. பேராசிரியர் ம.மு. உவைஸ்

- காலம் - 1922 -1996
- இஸ்லாமிய தமிழ் இலக்கிய கற்கைத் துறையினை அறிமுகப்படுத்தியவர்.

agaram.lk

- இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் தொடர்பான அவரது முதுமாணி கலாநிதி பட்டத்துக்குரிய ஆய்வுகள்.
- மதுரை காமராஜர் பல்கலைக்கழக இஸ்லாமியத் தமிழர் இலக்கியத் துறைப் பேராசிரியர்
- இவரது படைப்புக்கள் :-
  தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லீம்களின் பங்களிப்பு
  தமிழ் இலக்கியத்தில் முஸ்லீம் காப்பியங்கள்
  இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்று நூல்த் தொகுப்பு
  இஸ்லாமிய தமிழ் நூல்களின் விபரத்திரட்டு
  தமிழ் இலக்கிய அரபுச் சொல் அகராதி
- இஸ்லாமியத் தமிழ் இலக்கியத் தேடலும் பாதிப்புக்களும்
- மொழிப்பெயர்ப்பு கம்பெரலிய (கிராமப்பிறழ்வு)
- இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகளில் பங்களிப்பு

ஈ. எஸ்.பொன்னுத்துரை
காலம் - (1932 – 2014)
இடம் - யாழ்ப்பாணம்
ஈடுபட்ட துறைகள் - சிறுகதை, நாவல், விமர்சனம், கட்டுரை, மொழிப்பெயர்ப்பு, காவியம், நாடகம், புனைகதைசாரா இலக்கியங்கள், வாழ்க்கை வரலாறு, இலக்கிய நினைவும், ஊர்நினைவுகள், தொகுப்பு முயற்ச்சி, நூல்வெளியீட்டு முயற்சி.

புனைகதைத்துறை :- குடும்பம், பண்பாடு, பிரதேசவாழ்க்கை, பாலுணர்ச்சி, அரசியல் சார்ந்த படைப்புக்கள்.

முக்கியமான நாவல்கள் :- தீ, சடங்கு, மாயிணி
சிறுகதைத் தொகுப்பு :- வீ, அவா, ஆண்மை, வேறுபட்ட வித்தியாசமான மொழி நடை பரிசோதனை முயற்சிகள் :-
ஜவர்இணைந்து எழுதிய குறுநாவல் (மத்தாப்பு)
பலர் இணைந்தது எழுதிய நாவல் (மணிமகுடம்)
வித்தியாசமான தலைப்புக்கள் - வீ, தீ, அணி, தேர்

(2x7 ½ = 15 புள்ளிகள்)

**8)** அ.

I. பொருள் மயக்கம் :-
குருநாதருடன் பேசியபின் வாழ்க்கையில் நம்பிக்கை இழந்தனா அல்லது வாழ்க்கையில் நம்பிக்கை இழந்திருந்தவன் குருநாதருடன் பேசிய பின் புத்துணர்ச்சி பெற்றானா என்பது

திருத்தம் :-
வாழ்க்கையில் நம்பிக்கை இழந்திருந்த சீடன் தன் குருநாதருடன் பேசிய பின் மீண்டும் புத்துணர்ச்சி பெற்றான் / குருநாதருடன் பேசிய பின் வாழ்க்கையில் நம்பிக்கை இழந்திருந்த சீடன் மீண்டும் புத்துணர்ச்சி பெற்றான்.

II. வழு – உண்மையை மட்டுமே சொல்லப்பட வேண்டும் என்பது.
திருத்தம் - உண்மை மட்டுமே சொல்லப்பட வேண்டும் அல்லது உண்மையை மட்டுமே சொல்ல வேண்டும்.

III. நான் காலையில் கடைத்தெருவுக்குப் போய் / சென்று தமிழ்ப் பத்திரிகைகள் எல்லாவற்றையும் வாங்கி அங்கேயே தலைப்புச் செய்திகளைப் படித்து முடித்து பின்னர் வீடு திரும்பினேன்.

IV. செத்தேன் - சா
தந்தார் - தா
கண்டான் - காண்
விற்றார்கள் - வில்

V. இயல்புப் புணர்ச்சி
கிளி கூடு கட்டியது
பசு பால் தரும்
விகாரப்புணர்ச்சி
நான் கடையில் அழகான கிளிக் கூடு வாங்கினேன்
அம்மா எனக்கு பசுப்பால் தந்தார் (2x5 =10 புள்ளிகள்)

agaram.lk

ஆ. குற்றியலுகரம் :- தனிக்குற்றெழுத்து அல்லாத ஏனைய எழுத்துக்களின் பின் சொல்லின் இறுதியில் வல்லின மெய் மேல் ஏறிவரும் உகரம் குற்றியலுகரம். இது ஆறு வகைப்படும்.

1. நெடில் தொடர்க் குற்றியலுகரம் - ஆடு
2. ஆய்தத் தொடர்க் குறறியலுகரம் - எ.்.கு
3. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் - தராசு
4. வன் தொடர்க் குற்றியலுகரம் - பட்டு
5. மென்தொடர்க் குற்றியலுகரம் - பஞ்சு
6. இடைத்தொடர்க் குற்றியலுகரம் - சார்பு

II. விளிவேற்றுமை - இது எட்டாம் வேற்றுமை பேசுவோன் படர்க்கை இடத்திற்குரியவரை முன்னிலைப்படுத்தி விளித்துப் பேசுவதே விளிவேற்றுமை எனப்படும்.

மகனே வா !

கண்ணா ! (நீ) எங்கே போகிறாய் ?

III. அகப்புணர்ச்சி - இரண்டு அல்லது பல பகுபத உறுப்புக்கள் சேர்ந்து ஒரு சொல்லாக அமைவது அகப்புணர்ச்சியாகும்.

உ+ம் :- நாங்கள் = நாம் +கள்

மரத்தை = மரம் + அத்து + ஐ

வெட்டினோம் = வெட்டு +இன் +ஓம்

இரண்டு அல்லது பல தனிச்சொற்கள் இணைந்தும் கூட்டுச் சொற்கள் உருவாவதும் அகப்புணர்ச்சியாகும்.

உ+ம் :- வானொலி, தொலைக்காட்சி, பல்கலைக்கழகம் *(5 புள்ளிகள்)*

*(10 +5 = 15 புள்ளிகள்)*

agaram.lk